**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>**

**முன்னிலை :– திருமதி. P. கனிமொழி, L.L.M.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், தரங்கம்பாடி.

2056 திருவள்ளுவராண்டு விசுவாவசு வருடம் மாசி மாதம் 23 ஆம் நாள்.

2026–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 07 ஆம் நாள் சனிக் கிழமை

TNMY09-001107-2019

**<u>ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 219/2019</u>**

| | | |
|---|---|---|
| குற்றமுறையீட்டாளர் | : | அரசுக்காக, காவல் உதவி ஆய்வாளர்,<br>பூம்புகார் காவல் நிலையம்,<br>குற்ற எண். 14/2018 |

//எதிர்//

| | | |
|---|---|---|
| எதிரிகள் | : | 1. ராகேஷ்சர்மா, 29/2026<br>த/பெ பாஸ்கர்<br>மேலத்தெரு, எருமல், மேலப்பாதி அஞ்சல்,<br>சீர்காழி தாலுக்கா.<br><br>2. ராஜு, 28/2026,<br>த/பெ ரவிச்சந்திரன்<br>தெற்குதெரு, வேட்டங்குடி,<br>வேட்டங்குடி அஞ்சல்,<br>சீர்காழி தாலுக்கா. |

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | குற்றம் சாட்டப்பட்டது | : | எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 143, 341, மற்றும் பிரிவு 7(1)(a) CLA Act ன் கீழ் | |
| 2 | குற்றச்சாட்டு வனையப்பட்டது | : | எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 143, 341, மற்றும் பிரிவு 7(1)(a) CLA Act ன் கீழ் | |
| 3 | சம்பவம் நடந்த நாள் | : | 25.01.2018 | |
| 4 | முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட நாள் | : | 25.01.2018 | |
| 5 | எதிரி/எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் மற்றும் பிணையில் சென்ற விபரம் மற்றும் நாள் | : | கைது செய்யப்பட்ட நாள் | பிணையில் சென்ற நாள் |
| | | | 25.01.2018 | 29.01.2018 |
| 6 | குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | : | 25.01.2018 | |



KANIMOZHI

Digitally signed by KANIMOZHI
Date: 2026.03.07 18:22:08 +0530

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 7 | கு.வி.மு.ச. பிரிவு 240(1)ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து வினவப்பட்ட நாள் | : | 26.12.2023 | | |
| 8 | கு.வி.மு.ச. பிரிவு 317ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை தவிர மற்ற மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட விபரம் மற்றும் அதன் முடிவுகள் | : | --- | | |
| 9 | வழக்கின் சாட்சிகள் முதல் மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள் | : | சாட்சிகள் | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
| | | : | அ.சா.1 | 21.02.2025 | 21.02.2025 |
| | | | அ.சா.2 | 14.11.2025 | 14.11.2025 |
| | | | அ.சா.3 | 27.02.2026 | 27.02.2026 |
| 10 | எதிரி/எதிரிகளிடம் குற்றம் குறித்து கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் வினவிய நாள் | : | 04.03.2026 | | |

இவ்வழக்கு 06.04.2018 அன்று CC.126/2018 என சீர்காழி குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்ணில் கோப்பில் எடுக்கப்பட்டு பின்னர் இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு 14.10.2019 அன்று CC.219/2019 என இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு, இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனைக்கு வந்து, 04.03.2026–ஆம் தேதி என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது, அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் திருமதி. B. செந்தில்வடிவு, தரங்கம்பாடி அவர்கள் முன்னிலையாகியும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.C. தமிழன்பன் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களையும் கேட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு பிறப்பிக்கும்...

## தீர்ப்புரை

1. கடந்த 25.01.2018ம் தேதி காலை சுமார் 09.00 மணியளவில் பூம்புகாரிலிருந்து கருவி செல்லும் நெடுஞ்சாலையில் மேலையூர் பூம்புகார் கல்லூரி



KANIMOZHI Digitally signed by KANIMOZHI Date: 2026.03.07 18:22:17 +0530

முன்பு எதிரிகள் எவ்வித அரசு அனுமதியும் பெறாமல் நெடுஞ்சாலையில் நின்றுகொண்டு சாலையில் இரண்டு பக்கமும் வந்த வாகனங்களை மறித்தும், கல்லூரிக்கு சென்ற மாணவ மாணவிகளை மறித்து யாரும் கல்லூரிக்கு செல்லக்கூடாது என்று கூறி தாங்கள் இணைந்துள்ள SYFI என்ற அமைப்பு சார்பாக தமிழ்நாட்டில் பஸ் கட்டணம் உயர்த்தியதற்கு எதிர்ப்பு தெரிவித்து சாலை மறியல் மற்றும் ஆர்ப்பாட்டம் செய்ய வருமாறு சொல்லி எதிரிகள் சார்ந்துள்ள SYFI என்ற அமைப்பின் பெயரை சொல்லி போக்குவரத்திற்கும் பொதுமக்களுக்கும் இடையூறு செய்தும், அரசுக்கு எதிராக கோஷங்கள் சொல்லிக்கொண்டிருந்ததாக எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 143, 341, மற்றும் பிரிவு 7(1)(a) CLA Act ன் கீழ் குற்றம் புரிந்துள்ளதாக இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மேற்படி குற்ற அறிக்கையை பெற்ற இந்நீதிமன்றம் மேற்படி அறிக்கையை நன்கு பரிசீலித்து மேற்படி எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 143, 341 மற்றும் பிரிவு 7(1)(a) CLA Act ன் படி வழக்கினை கோப்பிற்கு எடுத்துக்கொண்டது.

3. எதிரிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜரானதும் எதிரிகளுக்கு அரசு தரப்பினரால் ஆதாரமாகக் கொள்ளப்பட்டதும். கு.வி.மு.ச பிரிவு 207ன் படி உள்ளதுமான வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டது.

4. எதிரிகளின் மீதான குற்றத்தின் சாராம்சத்தை குவிமுச பிரிவு 251 ன் கீழ் விளக்கி கூறி வினவியபோது எதிரிகள் குற்றத்தினை மறுத்துரைத்தனர். எனவே வழக்கானது அரசு தரப்பு சாட்சியத்திற்கு உட்படுத்தப்பட்டது.

5. அரசு தரப்பில் **அ.சா.1 முதல் அ.சா.3** சாட்சிகள் வாய்மொழி சாட்சிகளாக விசாரிக்கப்பட்டு அவர்கள் தரப்பில் **அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.3** வரையிலான சான்றாவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம்:–**

6. **அ.சா.1 வினோபா** தனது சாட்சியத்தில், தான் தற்போது புதுப்பட்டினம், காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளதாகவும், கடந்த



KANIMOZHI Digitally signed by KANIMOZHI Date: 2026.03.07 18:22:27 +0530

25.01.2018 ஆம் காலை 08.00 மணிக்கு பூம்புகார் மேலையூர் கல்லூரி முன்பு இரண்டு நபர்கள் சாலை மறியல் செய்வதாக கிடைத்த தகவலை உதவி ஆய்வாளர் கவிதா அவர்கள் பெற்றுக்கொண்டு, அவர்களுடன் தானும், சிறப்பு உதவி ஆய்வாளர் மூர்த்தி, தலைமைக்காவலர் முருகவேல் ஆகியோர்களுடன் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தபோது பூம்புகார் to கருவி சாலையில் பூம்புகார் கல்லூரி முன்பு சாலையின் இரண்டு பக்கமும் வாகனங்களை நிறுத்தி கல்லூரி மாணவ, மாணவிகளை கல்லூரிக்கு செல்லவிடாமல் மறித்தும், சாலை மறியலில் ஈடுபடச்சொல்லி SYFI என்ற இயக்கத்தை சேர்ந்தவர்கள் தமிழ்நாடு அரசு பஸ் கட்டணத்தை உயர்த்தியது சம்பந்தமாக சாலை மறியல் செய்யவேண்டும் என்று கல்லூரி மாணவ மாணவியரை அழைத்துக்கொண்டிருந்தார்கள் என்றும், அப்போது உதவி ஆய்வாளர் மற்றும் சிறப்பு உதவி ஆய்வாளர், தலைமைக்காவலருடன் மாணவர்களை அழைத்து விசாரித்தபோது கல்லூரியில் B.Sc., படித்து வருகிறோம் என்றும், SYFI–ன் சீர்காழி ஒன்றிய துணைச்செயலாளர்கள் நாங்கள் என்றும் கூறியதன்பேரில் அவர்களை உதவி ஆய்வாளர் பிடித்து விசாரணை செய்ய ஒருவர் ராகேஷ் சர்மா, த/பெ. பாஸ்கர், மேலத்தெரு, எருமல் என்றும், மற்றொருவர் ராஜூவ், த/பெ. சந்திரசேகர் , வேட்டங்குடி கிராமத்தை சேர்ந்தவர் என்றும் தெரியவந்தது என்றும், அவர்கள் இருவரும் அரசின் எந்த முன் அனுமதியும் இன்றி போக்குவரத்திற்கும் பொது மக்களுக்கும் இடையூறு விளைவிக்கும் வகையில் சாலை மறியலில் ஈடுபட்டவர்களை உதவி ஆய்வாளர் அவர்கள் காரணம் கூறி 09.00 மணிக்கு கைது செய்து 10.00 மணிக்கு பூம்புகார் காவல் நிலையம் கொண்டு சென்று பூம்புகார் காவல் நிலைய குற்ற எண் 14/2018 இதச பிரிவுகள் 143, 341 ன் கீழ் உ/இ 7(1)(a) CLA ன்கீழ் வழக்கினை பதிவுசெய்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

7. **அ.சா.2 முருகவேல்** தனது சாட்சியத்தில், தான் வைத்தீஸ்வரன்கோவில் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருவதாகவும், கடந்த 25.01.2018ம் தேதி பூம்புகார் காவல் நிலைய தலைமை காவலராக பணியில் இருந்தபோது காலை 08.00 மணியளவில் மேலையூர் பூம்புகார் கல்லூரியில் சாலை மறியல் செய்வதாக கிடைத்த தகவலின் படி பெண் காவல் உதவி ஆய்வாளர் கவிதா மற்றும் சிறப்பு உதவி ஆய்வாளர்கள் மூர்த்தி மற்றும் வினோபா ஆகியோர் தலைமையில் மேலையூர்



KANIMOZHI Digitally signed by KANIMOZHI Date: 2026.03.07 18:22:36 +0530

சென்றதாகவும், அங்கு பூம்புகார் கல்லூரி முன்பு பூம்புகார் – கருவி செல்லும் சாலையில் கல்லூரி வாசல் முன்பு சாலை மறியல் மற்றும் ஆர்பாட்டம் செய்து கொண்டிருந்த 2 நபர்களை காவல் உதவி ஆய்வாளர் அவர்கள் அழைத்து விசாரித்த போது பேருந்து கட்டண உயர்வை கண்டித்து நாங்கள் சாலை மறியல் செய்கிறோம் என்று கூறினார்கள் என்றும், அதற்கு அறிவிப்பு இல்லாமல் சாலை மறியல் செய்வது குற்றம் என கூறி அவர்களை கைது செய்தார்கள் என்றும், அவர்களை விசாரித்த போது ஒருவர் பெயர் ராகேஷ் சர்மா மற்றொருவர் பெயர் ராஜு என்றும் கூறினார்கள் என்றும், அவர்களை நிலையம் அழைத்து சென்று காவல் உதவி ஆய்வாளர் கவிதா அவர்கள் வழக்கு பதிவு செய்தார் என சாட்சியம் அளித்துள்ளார்.

8. **அ.சா.3 கவிதா** தனது சாட்சியத்தில், தற்போது மன்னார்குடி நகர காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருவதகாவும், கடந்த 25.01.2018ம் தேதி தான் பூம்புகார் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது பூம்புகார் கல்லூரியில் சாலை மறியல் செய்வதாக கிடைத்த தகவலின் படி தானும், சிறப்பு உதவி ஆய்வாளர் மூர்த்தி, தலைமை காவலர் முருகவேல் ஆகியோருடன் சம்பவ இடம் சென்றதாகவும், அங்கு எவ்வத அரசு அனுமதியும் பெறாமல் பேருந்து கட்டண உயர்வை கண்டித்த ராகேஷ் சர்மா மற்றும் ராஜு ஆகியோர் பூம்புகார் கல்லூரி எதிரில் மெயின் ரோட்டில் செல்லும் வாகனத்தை மறித்தும், பொது மக்களுக்கும் போக்குவரத்திற்கும் இடையூறு செய்தும், மேலும் கல்லூரி செல்லும் மாணவர்களுக்கு இடையூறு செய்தும் ஆர்பாட்டம் செய்தவர்களை குற்ற காரணம் கூறி சாட்சிகள் முன்னிலையில் அன்றைய தினமே காலை 09.00 மணிக்கு கைது செய்தும், எதிரிகளுடன் 10.00 மணிக்கு காவல் நிலையம் வந்து பூம்புகார் காவல் நிலைய குற்ற எண். 14/2018, இதச பிரிவுகள் 143, 341, மற்றும் பிரிவு 7(1)(a) CLA Act கீழ் வழக்கின் **அ.சா.ஆ–1 ஆன முதல் தகவல் அறிக்கையை** பதிவு செய்ததாகவும், பின்னர் சம்பவ இடம் சென்று சாட்சிகள் முருகவேல் மற்றும் மூர்த்தி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு **அ.சா.ஆ.2 ஆன பார்வை மகசர் மற்றும் அ.சா.ஆ.3 ஆன வரைபடம்** தயார் செய்ததாகவும், பின்னர் எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்ததாகவும், சம்பவத்தின்போது உடனிருந்து மூர்த்தி, முருகவேல், வினோபா ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலங்களை பதிவு செய்ததாகவும், பின்னர்



KANIMOZHI
Digitally signed by KANIMOZHI
Date: 2026.03.07 18:22:45 +0530

இவ்வழக்கின் புலன் விசாரணையை முடித்து எதிரிகளின் மீது 25.01.2018ம் தேதி இதச பிரிவுகள் 143, 341 மற்றும் பிரிவு 7(1)(a) CLA Actன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

9. இவ்வழக்கில் அரசு தரப்பில் அரசு தரப்பு பட்டியல் சாட்சி 1 ஐ விசாரிக்க தேவையில்லை என்று கருதி மேற்குறிப்பு செய்ததன் பேரில் அந்த சாட்சியை விசாரிப்பதில் இருந்து விலக்கப்பட்டுள்ளார். இத்துடன் அரசுத்தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

10 எதிரிகளிடம் கு.வி.மு.ச. பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் எதிரிகளுக்குப் பாதகமாக தோன்றும் சங்கதிகளைப் பொறுத்து கேள்வி கேட்கப்பட்டது. எதிரிகள் சாட்சியத்தை மறுத்துரைத்தும், தமது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று கூறினார். எதிரிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை.

11. இரு தரப்பு ஆவணங்களையும், சாட்சியங்களையும் பரிசீலனை செய்ததில், இவ்வழக்கிற்கு தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில், அரசு தரப்பில் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளான இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 143, 341 மற்றும் பிரிவு 7(1)(a) CLA Act ன் படியானவை சந்தேகத்திற்கு இடமின்றி அரசு தரப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

12. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் கவனமாகப் பரிசீலிக்கப்பட்டது.

<u>**தீர்வு**</u>

13. அரசு தரப்பில், கடந்த 25.01.2018ம் தேதி காலை 09.00 மணியளவில் பூம்புகாரிலிருந்து கருவி செல்லும் சாலையில் மேலையூர் பூம்புகார் கல்லூரி முன்பு எதிரிகள் எவ்வித அரசு அனுமதியும் பெறாமல் நெடுஞ்சாலையில் நின்றுகொண்டு சாலையில் இரண்டு பக்கமும் வந்த வாகனங்களை வழிமறித்தும், கல்லூரிக்கு சென்ற மாணவ மாணவிகளை மறித்து யாரும் கல்லூரிக்கு செல்லக்கூடாது என கூறி தாங்கள் இணைந்துள்ள SYFI என்ற அமைப்பு சார்பாக தமிழ்நாட்டில் பேருந்து கட்டணம்



KANIMOZHI Digitally signed by KANIMOZHI Date: 2026.03.07 18:22:53 +0530

உயர்த்தியதற்கு எதிர்ப்பு தெரிவித்து சாலை மறியல் மற்றும் ஆர்ப்பாட்டம் செய்ய வருமாறு சொல்லி எதிரிகள் சார்ந்துள்ள SYFI என்ற அமைப்பினை பெயரை சொல்லி போக்குவரத்திற்கும் பொதுமக்களுக்கும் இடையூறு செய்தததாகவும், அரசுக்கு எதிராக கோஷங்கள் எழுப்பியதாகவும் எதிரிகள் மீது இந்த வழக்கானது முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது.

14. எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும் பொருட்டு அரசு தரப்பில் **அ.சா.1 முதல் அ.சா.3** வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு சான்றாவணமாக **அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.3 வரை** குறியீடு செய்யப்பட்டுள்ளது.

15. அ.சா.1 தனது சாட்சியத்தில், கடந்த 25.01.2018ம் தேதி காலை 08.00 மணிக்கு பூம்புகார் மேலையூர் கல்லூரி முன்பு இரண்டு நபர்கள் சாலை மறியல் செய்வதாக கிடைத்த தகவலை உதவி ஆய்வாளர் கவிதா அவர்கள் பெற்றுக்கொண்டு அவர்களுடன் தானும், சிறப்பு உதவி ஆய்வாளர் மூர்த்தி, தலைமை காவலர் முருகவேல் ஆகியோர்களுடன் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தபோது பூம்புகாரிலிருந்து கருவி செல்லும் சாலையில் பூம்புகார் கல்லூரி முன்பு சாலையில் இரண்டு பக்கமும் வாகனங்களை நிறுத்தி கல்லூரி மாணவ மாணவிகளை கல்லூரிக்கு செல்லவிடாமல் மறித்தும், சாலை மறியலில் ஈடுபடச்சொல்லி SYFI என்ற இயக்கத்தை சேர்ந்தவர்கள் தமிழ்நாடு அரசு பஸ் கட்டணத்தை உயர்த்தியது சம்மந்தமாக சாலை மறியல் செய்யவேண்டும் என்று கல்லூரி மாணவ மாணவியர்களை எதிரிகள் அழைத்துகொண்டிருந்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

16. அ.சா.2 தனது சாட்சியத்தில் சம்பவத்தன்று பூம்புகார் கல்லூரி முன்பு பூம்புகாரிலிருந்து கருவி செல்லும் சாலையில் கல்லூரி வாசல் முன்பு சாலை மறியல் மற்றும் ஆர்ப்பாட்டம் செய்துகொண்டிருந்த இரண்டு நபர்களை காவல் உதவி ஆய்வாளர் அவர்கள் அழைத்து விசாரித்தபோது பேருந்து கட்டண உயர்வை கண்டித்து தாங்கள் சாலை மறியல் செய்வதாக கூறினார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.



KANIMOZHI Digitally signed by KANIMOZHI Date: 2026.03.07 18:23:01 +0530

17. இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரி அ.சா.3 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில் சம்பவத்தன்று பூம்புகார் கல்லூரி சாலையில் மறியல் செய்வதாக கிடைத்த தகவலின் படி தானும், சிறப்பு உதவி ஆய்வாளர் மூர்த்தி, தலைமை காவலர் முருகவேல் ஆகியோருடன் சம்பவ இடத்திற்கு சென்றதாகவும், அங்கு எவ்வித அரசு அனுமதியும் பெறாமல் பேருந்து கட்டண உயர்வை கண்டித்து எதிரிகள் பூம்புகார் கல்லூரி எதிரில் மெயின்ரோட்டில் செல்லும் வாகனங்களை மறித்தும், பொதுமக்களுக்கும் போக்குவரத்திற்கும் இடையூறும் செய்தும், கல்லூரி செல்லும் மாணவர்களுக்கு இடையூறு செய்து ஆர்ப்பாட்டம் செய்தவர்களை குற்ற காரணம் கூறி கைது செய்து இறுதியறிக்கை தாக்கல் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

18. அ.சா.1 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில், **" சம்பவ இடத்தில் பொது மக்கள் அதிக நடமாட்டம் உள்ள பகுதி என்றாலும், மாணவ மாணவியர்கள் அதிகம் இருப்பார்கள் என்றாலும் சரிதான், சம்பவ இடத்தில் எதிரிகள் அடைத்து வைத்ததாகவோ அல்லது வழிமறித்து வைத்திருந்ததாகவோ யாரேனும் கூறினார்களா என்றால் இல்லை"** என்று சாட்சியம் அளித்துள்ளார்.

19. எதிரிகள் மீது இதச பிரிவுகள் 143 மற்றும் 341 ன் படி குற்றம் புரிந்துள்ளதாக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஐந்து அல்லது அதற்கு மேற்பட்டவர்களை கொண்ட ஒரு சட்ட விரோதமான கும்பலில் உறுப்பினர்களாக இருப்பர்வளுக்கு தண்டனை பற்றி இதச பிரிவு 143 ல் கூறப்பட்டுள்ளது. எனவே, பிரிவு 143ன் கீழ் ஒருவர் தண்டிக்கப்படவேண்டும் என்றால் அந்த நபர் ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களைக்கொண்ட ஒரு சட்டவிரோதமான கும்பலில் உறுப்பினராக இருக்கவேண்டும். ஆனால், இந்த வழக்கில் 2 (இரண்டு) நபர்கள் மட்டுமே போராட்டம் செய்ததாக அவர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. எனவே, 2 நபர்கள் மட்டுமே இருப்பதால் அவர்கள் சட்டவிரோதமான கும்பல் என்ற வரையறைக்குள் வரமுடியாது. எனவே, எதிரிகள் இதச பிரிவு 143ன் கீழ் குற்றவாளி என்பதை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.



KANIMOZHI Digitally signed by KANIMOZHI Date: 2026.03.07 18:23:09 +0530

20. மேலும், எதிரிகள் சாலை மறியல் செய்தததால் பொதுமக்களுக்கும் போக்குவரத்துக்கும் இடையூறாக இருந்ததாகவோ அல்லது போக்குவரத்து ஸ்தம்பித்து நின்றதாகவோ சாட்சிகள் யாரும் சாட்சியம் அளிக்கவில்லை. சம்பவம் நடந்த இடமானது பொதுமக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள பகுதி என்பது சாட்சிகளின் சாட்சியங்கள் மூலம் தெரிய வருகிறது. அவ்வாறு உள்ள நிலையில் தனி நபர்கள் யாரும் புகார் கொடுக்கவில்லை. அவ்வாறு புகார் கொடுக்காதது அரசு தரப்பு வழக்கை பாதிப்படையச் செய்வதாக உள்ளது. மேலும், பூம்புகார்க் கலைக்கல்லுரி மாணவர்களை சேர்த்துக்கொண்டு எதிரிகள் கோஷமிட்டதாக கூறப்பட்டுள்ள நிலையில் அந்த கல்லுரி நிர்வாகத்தினர் மேற்படி எதிரிகள் மீது எவ்வித புகாரும் கொடுக்கவில்லை. மேலும், எதிரிகள் போராட்டம் செய்ததால் தங்களுக்கு இடையூறாக இருந்ததாக தனிநபர்கள் யாரும் சாட்சியம் அளிக்கவில்லை. அவ்வாறு சாட்சியம் அளிக்காதது அரசு தரப்பு வழக்கை பாதிப்படையச் செய்வதாக உள்ளது என இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, எதிரிகள் மீதான குற்றத்தை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை விடுதலை செய்யவேண்டும் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

21. முடிவாக, எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 143, 341, மற்றும் பிரிவு 7(1)(a) CLA Act ன் கீழ் சுமத்தப்பட்ட குற்றங்களில் எதிரிகள் **"குற்றவாளிகள் இல்லை"** என்று தீர்மானித்து, எதிரிகளை குவிமுச பிரிவு 248(1)–ன் கீழ் **விடுதலை** செய்து இந்த நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

22. அரசு தரப்பில் இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. அது குறித்து உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை.

23. எதிரியால் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பிணைப் பத்திரத்தினை ரத்து செய்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.



KANIMOZHI

Digitally signed by KANIMOZHI
Date: 2026.03.07 18:23:17 +0530

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து – தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைகள் நீக்கம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 07 ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

KANIMOZHI

Digitally signed by KANIMOZHI
Date: 2026.03.07 18:23:25 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
தரங்கம்பாடி.

**அட்டவணை :–**

**அரசு தரப்பு சாட்சிகள்:–**

அ.சா.1 – வினோபா, சிறப்பு உதவி ஆய்வாளர்

அ.சா.2 – முருகவேல், தலைமைக்காவலர்

அ.சா.3 – கவிதா, காவல் ஆய்வாளர்

**அரசு தரப்பு சான்றாவணங்கள்** :–

அ.சா.ஆ. 1 – முதல் தகவல் அறிக்கை

அ.சா.ஆ.2 – பார்வை மகசர்

அ.சா.ஆ.3 – மாதிரி வரைபடம்

**அரசு தரப்பு சான்று பொருட்கள்** :– இல்லை

**எதிரிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்று பொருட்கள்** :– இல்லை

.

KANIMOZHI

Digitally signed by KANIMOZHI
Date: 2026.03.07 18:23:32 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
தரங்கம்பாடி.

**குறிப்பு:**

1. வழக்கு விசாரணையின்போது எதிரிகள் ஜாமீனில் இருந்தனர்.

2. எந்த ஒரு சாட்சியையும் விசாரணைக்காக மூன்று வாய்தாக்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

3. வழக்கு முடிவு குறித்து காவல் துறையினருக்குத் தெரிவிக்கப்பட்டது.